## கரூர் தோட்டக்கலை துணை இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ஆணை

## முன்னிலை : திருமதி.ச.மணிமேகலை, பி.எஸ்ஸி (தோ.க)

ந.க.எண்.அ3/2565/2021 நாள்: **27.10.2022**

பொருள்: பணிக்குழு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (போட்டி தேர்வு) – ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு தொகுதி 4–ன் மூலம் 2018-19 மற்றும் 2019-2020 ஆம் ஆண்டுக்கான இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது) பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு பணி நியமனம் வழங்கப்பட்டது – இளநிலை உதவியாளர் (பி.அ) பதவியில் பணிவரன்முறை செய்து உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை:

1. செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கடிதம் எண்:2359/PSD – 1/2020, நாள்: 29.05.2020.
2. சென்னை–5, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்:அநிபி5/22094/2020, நாள்:05.08.2020.
3. சென்னை–5, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்:அபபி2/5391/2020, நாள்:07.08.2020.
4. சென்னை–5, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்:அபபி2/15469/2021, நாள்:09.09.2021.

*********

**உத்தரவு:**

பார்வை–1ல் காணும் கடிதத்தின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய தொகுதி –IV ல் அடங்கிய பணிகள் நேரடித் தேர்வு 2018-2019 மற்றும் 2019-2020 ஆம் ஆண்டில் இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது) பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு பார்வை–2ல் காணும் செயல்முறை ஆணையின்படி தோட்டக்கலைத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை–3ல் காணும் செயல்முறை ஆணையின்படி தோட்டக்கலை இயக்குநர் அலுவலகம் / டான்ஹோடா அலுவலகத்தில் திருமதி.ரா.பிரியங்கா, இளநிலை உதவியாளர் (பி.அ)–ஆக பணியேற்றுள்ளார்.

மேலும், பார்வை (4)-ல் காணும் செயல்முறை ஆணையின்படி கரூர் தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகத்திற்கு விருப்ப மாறுதலில் இளநிலை உதவியாளராக பணிமாறுதல் வழங்கி ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து, தனியர் தோட்டக்கலை இயக்குநர் அலுவலகத்திலிருந்து 15.09.2021 பிற்பகல் விடுவிக்கப்பட்டு இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளர் (பி.அ)–ஆக 16.09.2021 முற்பகல் பணியேற்று கொண்டார்.

Scanned with CamScanner

அதனைத் தொடர்ந்து, இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளர் (பி.அ)–ஆக பணிபுரியும் கீழ்க்கண்ட பணியாளர் பணியினை பணியேற்ற நாள் முதல் பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

| வ.எண் | பணியாளர் பெயர் | பதவி | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்த நாள் |
|---|---|---|---|---|
| 1 | திருமதி.ரா.பிரியங்கா | இளநிலை உதவியாளர் (பி.அ) | 24.08.2020 மு.ப | 24.08.2020 மு.ப |

இப்பணிவரன்முறை, சென்னை உயர்நீதிமன்ற சென்னை / மதுரை கிளைகளில் இந்நியமனம் தொடர்பாக நிலுவையிலுள்ள ரிட் மனுக்களில் வழங்கப்படும் இறுதித் தீர்ப்புக்கு உட்பட்டது என்றும் உத்தரவிடப்படுகிறது. ("The regularization is subject to the outcome of WP's pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Services Examination Group-IV for the year 2018-2019 and 2019-2020 recruitment)

மேற்காணும் பணியாளர்கள் இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது) பதவியில் இரண்டு ஆண்டுகால தகுதிகாண் பருவத்தினை மூன்றாண்டு தொடர் பணிக்காலத்திற்குள் முடிக்க வேண்டும். இரண்டு ஆண்டுகால பணிக்காலத்திற்குள் இளநிலை உதவியாளர் / உதவியாளர்களுக்கான பவானிசாகர் அடிப்படை பயிற்சியினை நிறைவு செய்து இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது) பதவியில் தகுதிகாண் பருவம் முடித்ததாக அறிவித்து ஆணையிடப்பட்ட பின்னரே இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது) பதவியில் 2–வது மற்றும் தொடர் காலமுறை ஊதிய உயர்வுகள் பெறத் தகுதியுடைவராவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தோட்டக்கலை துணை இயக்குநர்
கரூர்

27/10/2022

பெறுநர்:

திருமதி.ரா.பிரியங்கா,
இளநிலை உதவியாளர், இவ்வலுவலகம்.

நகல்:சென்னை–5, தோட்டக்கலை மற்றம் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்: சென்னை-5, வேளாண்மை இயக்குநர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்:கரூர், வேளாண்மை இணை இயக்குநர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்:பணிப்பதிவேட்டிற்கு.

Scanned with CamScanner